மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் முதலிலேயே நான் சொன்னேன், அரசு இதைப்பற்றி தீவிரமாகப் பரிசீலிக்கும் என்று.

திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்காகக் கட்டப்படுகின்ற வீடுகளை பச்சை செங்கலால் கட்டி, மண்ணை வைத்துப் பூச வேண்டும் என்று தாக்கீது வந்திருக்கிறது. இந்த நிலையை மாற்றி, சுட்ட செங்கலால் கட்டுவதற்கும், அவற்றைப் பூசுவதற்கு சிமெண்ட் வழங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி கேட்டால் விளக்கமாகப் பதில் அளிக்கப்படும்.

குத்தாலம் தொகுதியிலுள்ள பொட்டையார் வாய்க்காலை சீர் செய்தல்

19—(*வினா எண். 7932) திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல ஒன்றியத்தில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு வடிகாலாக இருக்கும் ''பொட்டையார் வாய்க்காலை'' சீர் செய்து தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, குடவாசல் ஒன்றியத்தில் ஓடும் பொட்டையார் வாய்க்காலை சீர் செய்வதற்கான செயற குறிப்பு அரசால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. இதற்கான சீர் செய்யும் திட்ட மதிப்பீடு ரூ. 60,000-க்கு கும்பகோணம் காவிரி சீரமைப்புக் கோட்ட செயற் பொறியாளரால் ஒப்புதல் அளிக்கப் பட்டு ஜூலை 1984-ல் வேலை ரூ. 49,397 செலவில் முடிக்கப் பட்டது. இதைத்தவிர புதிய செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியத்தில் ஓடும் பொட்டையார் வாய்க்காலின் நீளம் சுமார் 10 கிலோ மீட்டராகும். 1984 ஆம் ஆண்டு இதிலே ஒரு பகுதியை மட்டும் செப்பனிட்டு இருக்கிறார்கள். கடந்த ஆண்டு ஏற்பட்ட

1986 நவம்பர் 14]

வெள்ளத்தின் காரணமாக சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அரசு இந்த ஆண்டு அந்த வாய்க்காலின் நீளமான 10 கிலோ மீட்டரையும் முழுமையாகச் செப்பனிட்டு, பாசனத்திற்குத் தேவையான இடங்களில் ரெகுலேட்டர்களைக் கட்டி, சீர்திருத்தம் செய்யும் திட்டம் இந்த அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சீர் செய்யும் திட்டம் அரசினுடைய கவனத்தில் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல இருக்குமானால் இந்தத் திட்டத்தை ஆய்வு செய்ய வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் படுகையில் இந்த ஆண்டு எத்தனை வாய்க்கால்கள் வெட்டப்பட்டு இருக்கின்றன என்ற விவரத்தை இந்த அவையில் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் படுகையில் ஏறத்தாழ 696 வாய்க்கால்கள் உள்ளன. இந்த 8 வருட காலத்தில் சுமார் 300 வாய்க்கால்களை நாங்கள் சரி செய்திருக்கிறோம். இன்னும் மீதி இருப்பதை, தமிழக முதலமைச்சர் அவர்கள் 5 ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். வருடத்திற்கு சுமார் 70 லட்சம் ரூபாய் செலவில் இந்த வாய்க்கால்களை செப்பனிட்டுக் கொண்டு இருக்கிறோம்.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுகா முல்லையாற்றில் வாய்க்கால் அமைத்தல்.

20—(*வினா எண். 9249) **திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுக்கா, அலங்காநல்லூர் போலீஸ் சரகத்தைச் சேர்ந்த பெரிய ஊர்ச்சேரி கிராமத்தில் ஓடிக்கொண்டிருக்கும் முல்லையாற்று தண்ணீரை வாய்க்கால் அமைத்து அந்த ஊருக்கு பாசன வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது துவங்கும் ?